# இடைப்பாடி நகராட்சி

## 04.06.2020ம் தேதிய நடைபெற்ற நகர்மன்ற சிறப்பு கூட்ட நடவடிக்கைகளின் விபரம்

பொருள் 1

இடைப்பாடி நகராட்சியில் 2015ஆம் ஆண்டு முதல் JICA குடிநீர் திட்டம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், சேலம், நகர் பிரிவு க.எண்2216/F Edappady WSIS/JDO1/U/Slm/2015, Dt.05.02.2016 ம் தேதி ஒப்படைப்பு கடிதம் வரப்பெற்று, நகராட்சி மூலம் பராமரிப்பு பணி மேற்கொள்ளப்பட்டு வரப்பெறுகின்றது.

மேற்படி திட்டத்தின் மின்மோட்டார்கள் , மின்மீட்டர்கள், சுத்திகரிப்பு நிலையம், DI பிரதான குழாய்கள் ஆகியவற்றை இயக்கவும், தலைமை நீரேற்று நிலையத்தில் இருந்து நகராட்சி பகுதியில் உள்ள தரைமட்டத் தொட்டிகளுக்கு குடிநீரை ஏற்றி, பின் மேல்நிலைத் தொட்டிகளுக்கு குடிநீரை நிரப்பும் பணிகளை செய்யவும் திரு.பி.மணி ஒப்பந்ததாரர் அவர்களுக்கு நகர் மன்ற தீர்மானம் எண்75, நாள் 31.03.2020ன்படி ந.க.எண் 464/2016/இ2, நாள் 31.03.2020ல் 01.04.2020 முதல் 30.06.2020 வரை பணி உத்திரவு வழங்கப்பட்டு பணிகளை செய்து வந்து கொண்டிருந்தார்.

இந்நிலையில் பி.மணி ஒப்பந்ததாரர் வசம் பணிபுரியும் காசி என்ற நபர் கடந்த 01.06.2020 முதல் 03.06.2020 வரை தலைமை நீரேற்று நிலையத்தில் பணிபுரியும் நகராட்சி ஊழியர் திரு.மா.மாதேஸ், மின்பணியாளர் அவர்களுடன் தலைமை நீரேற்று நிலையத்தில் உள்ள குடியிருப்பில் உள்ள அவரின் குடும்ப உறுப்பினர்களிடமும் மது அருந்திவிட்டு வந்த தகராறு செய்து அடித்ததாகவும், அவரின் மனைவியிடம் தகாத வார்த்தைகளை பேசி தவறாக நடக்க முயன்றதாகவும், தலைமை நீரேற்று நிலையத்தில் உள்ள வாழை மரங்களை கத்தியால் வெட்டி சாய்ததாகவும், கைபேசி வழியாக 03.06.2020 மாலை புகரளித்தன் பேரில் நகராட்சி ஆணையாளர், நகராட்சி பொறியாளர் மற்றும் உதவி பொறியாளர் ஆகியோர் தலைமை நீரேற்று நிலையம் சென்று விசாரிக்கப்பட்டது.

அப்போது காசி என்ற நபர் தலைமை நீரேற்று நிலையத்தின் பில்டர் பெட் அமைந்துள்ள கட்டிடத்தின் மேல் மாடியில் மது அருந்தி போதையில் படுத்து கொண்டிருந்ததை உறுதி செய்யப்பட்டது. ஆணையர் அவர்கள் அவரை விசாரனை செய்த போது வாழை மரம் நான் நட்டது. நான் வெட்டினேன் என்று ஆணவமாக பதில் கூறினார். மேலும் மாடியிலிருந்து கிழே இறங்கி வருவதற்கு உதவி பொறியாளர் ஓட்டுநர் போன்றவர்கள் பலமுறை சொல்லியும் தான் தூங்கி ஓய்வெடுத்து கொண்டிருப்பதாகவும், பின்னர் வருவதாகவும் கூறி சுமார் 15 நிமிடங்கள் கடந்த பின்னர் தான் கீழே இறங்கி வந்தார். மேலும் மாதேஸ், மின்பணியாளர் அவர்களின் வீட்டு உபகரனங்களை அடித்து நொருக்கியிருந்தையும் ஆணையர் அவர்களின் முன்னிலையில் உறுதி செய்யப்பட்டது.

இது போன்ற ஏற்க முடியாத செயல்களை பி.மணி, ஒப்பந்ததாரின் ஊழியர் செய்ததாலும் மேற்படி இடத்தில் மின்மோட்டார்கள் மற்றும் மின்சார பேனல் போர்டுகள் ஆகியவை உள்ளதாலும், இச்செயல்கள் குடிநீர் விநியோகத்தில் தடைகளை ஏற்படுத்தும் என்பதாலும் இதனால் பொதுமக்களிடம் நகராட்சி அவப்பெயர் ஏற்படும் என்பதாலும் மாதேஸ், மின்பணியாளர், உதவிப்பொறியாளர் அவர்களின் குறிப்புகளின் படியும் பி.மணி, ஒப்பந்ததாரர் அவர்களின் ஒப்பந்ததத்தை 31.05.2020 முதல் இரத்து செய்ய மன்ற அனுமதிக்கும் ஆணையர் அவர்களின் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

மேலும், குடிநீர் பராமரிப்பு பணிகள் தடை பட்டால், பொது மக்கள் குடிநீர் கிடைக்க இக்கோடை காலத்தில் மிகவும் சிரமப்படுவார்கள் என்பதாலும், குடிநீர் விநியோகம் தடைபடாமல் மேற்கொள்ளவும், பணியின் அவசர அவசியம் கருதி 01.06.2020 முதல் 30.06.2020 வரை இந்நகராட்சியில் குடிநீர் குழாய் பணிகள், குடிநீர் குழாய் leakage பணிகள், கைப்பம்பு பராமரிப்பு பணிகள் ஆகியவற்றை செய்யும் நகராட்சியில் பதிவு பெற்ற ஒப்பந்ததாராக உள்ள திரு.பி.சுப்ரமணி, ஒப்பந்ததாரர் அவர்களை வைத்து மேற்படி பராமரிப்பு பணிகளை மேற்கொள்ளவும், அவர் 2016–2017 ஆம் ஆண்டின் விலை விகிதத்தின் படியான தொகைக்கு பணிகளை செய்யவும், மேற்படி ஒப்பந்ததாரர் சம்மத கடிதம் கொடுத்துள்ளபடியால் இம்மாத பராமரிப்பு பணிகளை மேற்கொள்ள அவருக்கு பணி உத்தரவு வழங்கி பணிகளை நகராட்சிகளின் சட்டம் 1920 விதி எண் 15ன்படி நகர் மன்ற அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கி மேல் நடவடிக்கை தொடரவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது

அலுவலகக்குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. இந்நகரின் குடிநீர் பணியின் அவசரம் அவசியம் கருதி நகராட்சிகளின் சட்டம் 1920 விதி எண் 15ன்படியும், 2016–2017 ஆம் ஆண்டின் விலை விகிதத்தின் படியும் 01.06.2020 முதல் 30.06.2020 வரை இந்நகராட்சியில் குடிநீர் குழாய் பணிகள், குடிநீர் குழாய் leakage பணிகள், கைப்பம்பு பராமரிப்பு பணிகள் ஆகியவற்றை செய்ய திரு.பி.சுப்ரமணி, ஒப்பந்ததாரர் அவர்களுக்கு பணி உத்தரவு வழங்கவும் மேற் நடவடிக்கை தொடரவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.1013/20/இ2)

பொருள் 2

இடைப்பாடி நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் தார்சாலைகள் தமிழ்நாடு நகர்புற சாலைகள் அபிவிருத்தி திட்டத்தின் கீழ் (TURIP–2020–2021) அமைப்பதற்கு மதிப்பீடு ரூ.34.00 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி பணிகளை செய்ய TURIP 2020–2021–திட்ட நிதியின் கீழ் அரசின் முழு மான்யமாக நிதி ஒதுக்கீடு வழங்கக் கோரியும், இப்பணிகளை TURIP 2020–2021 திட்டத்தின் கீழ் மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கக்கோரியும், திட்டபிரேரணை தயார் செய்து நகராட்சி நிர்வாக ஆணையர் , சென்னை அவர்களுக்கு அனுப்பி நிதி ஒதுக்கீடு பெற மன்றத்தின் அனுமதிக்கும் ஒப்புதலுக்கும்.

<u>அலுவலககுறிப்பு</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. தமிழ்நாடு நகர்புற சாலைகள் அபிவிருத்தி திட்டத்தின் கீழ் (TURIP 2020–2021) அரசின் நிதியுதவி மற்றும் நிர்வாக அனுமதி பெற்று மேற்காணும் பணியை மேற்கொள்ளவும், கூடுதலாகும் செலவினத் தொகையை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.438 /2020/இ2 )

தனிஅலுவலர் மற்றும் ஆணையாளர்
இடைப்பாடி நகராட்சி

# இடைப்பாடி நகராட்சி

## 09.06.2020ம் தேதிய நடைபெற்ற நகர்மன்ற சிறப்பு கூட்ட நடவடிக்கைகளின் விபரம்

பொருள் 1

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட இடைப்பாடி கிராமம் புல எண் 234/1,2 TSLR No.30/3,4 (part) என்ற இடத்தில் அனைவருக்கும் வீடு திட்டத்தின் கீழ் தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தின் A,B&C பிளாக்குகளில் தரைதளம் + இரண்டு தளங்களில் 352 குடியிருப்புகள் கொண்ட அடுக்குமாடி குடியிருப்பு கட்டிடங்கள் கட்ட துணை இயக்குநர், நகர் ஊரமைப்பு துறை சேலம் மண்டல அவர்களின் கடிதம் ந.க.எண் 2268/2019 சேம–3 நாள் 26.02.2020ல் மனையிட ஒப்புதல் வழங்கப்பட்டதில் சிறப்பு நிபந்தனைகள் 1ல் கண்டுள்ளவாறு a முதல் g வரையிலான 1144.79 ச.மீ பரப்புள்ள திறந்தவெளி இடம் (பூங்கா) இந்நகராட்சிக்கு தானமாக பத்திர பதிவு செய்து ஒப்படைக்க தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி நிர்வாகப்பொறியாளர் தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம் சேலம் கோட்டம் அவர்களின் கடிதம் ந.க.எண 833/உநிபொ (தி) 2017 நாள் 03.06.2020 –ல் மேற்படி இடத்தில் அடுக்குமாடி குடியிருப்பு கட்டிடங்கள் கட்ட கட்டிட அனுமதி மற்றும் திட்ட அனுமதி வழங்குமாறும் தற்சமயம் மேற்படி இடத்தில் பணிகள் மேற்கொள்ள முன்நுழைவு வழங்கப்பட்டுள்ளது. மேலும் இந்நிலத்திற்கு நில உரிமை மாற்றம் செய்யும் அரசாணை வரப்பெற்றவுடன் நில ஆவணங்களில் தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தின் பெயரில் பதியப்பெற்று திறந்தவெளி இடம் (OSR) பகுதியினை ஆணையாளர் இடைப்பாடி நகராட்சிக்கு தானமாக பதிவு செய்து தரப்படும் எனவும் இந்நிலம் சம்மந்தமான நகராட்சி கட்டிட அனுமதி பெற்றால் தான் இத்திட்டப்பகுதியில் பணிகளை தொடர்ந்து மேற்கொண்டு கட்டிட பணிகளை முடிக்க இயலும். எனவே அவசர நிலையை கருத்தில் கொண்டு கட்டிட அனுமதி வழங்குமாறு 20 ரூபாய் உறுதி மொழி பத்திரம் நிர்வாகப் பொறியாளர், தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம் சேலம் கோட்டம் அவர்கள் எழுதி கொடுத்துள்ளார்.

1. துணை இயக்குநர், நகர் ஊரமைப்பு துறை சேலம் மண்டலம் அவர்களின் கடிதம் ந.க.எண் 2268/2019/சேம –3, நாள் 26.02.2020 மற்றும் ஒப்புதல் அளிக்கப்பட்ட வரைபடம் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.
2. நிர்வாக பொறியாளர், தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம் சேலம் கோட்டம் அவர்களின் உறுதிமொழி பத்திரத்தினை ஏற்க மன்ற ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

அலுவலககுறிப்பு

1. மன்றம் பதிவு செய்யலாம்.
2. அவசர அவசியம் கருதி அனைவருக்கும் வீடு திட்டத்தின்கிழ் அடுக்குமாடி குடியிருப்பு கட்டிடங்கள் கட்ட கட்டிட அனுமதி மற்றும் திட்ட வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண் 3036/2019/அ2)

பொருள் 2

இந்நகராட்சிக்கு சொந்தமான பல வகைப்பட்ட குத்தகை இனங்களில் இருந்து பிடித்தம் செய்யப்படும் சரக்கு மற்றும் சேவை வரிகளை மார்ச் – 2020ம் மாதத்திற்கு மத்திய, மாநில அரசுகளுக்கு தாக்கல் செய்தமைக்கு கட்டணம் ரூ500/– மற்றும் 2017 –2018 முதல் 2018 – 2019 ஆகிய இரண்டு வருடங்களுக்கு ஆண்டு அறிக்கை தாக்கல் செய்ய ரூ9000/– ஆக மொத்தம் ரூ9500/– வரி ஆலோசகர் திரு.எம்.பரமேஸ்வரன் அவர்களுக்கு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலககுறிப்பு

1) அனுமதிக்கலாம்.
2) அவசர அவசியம் கருதி நகர மன்ற தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று தொகையினை செலுத்தியமைக்கும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

(ந.க.எண் 838/2020/பி4)

பொருள் 3

இந்நகராட்சியின் கீழ் இயங்கி வரும் அம்மா உணவகத்திற்கு உணவு உண்ண வருபவர்களுக்கு உணவுக்காக வழங்கப்பட்டு வரும் டோக்கன் அச்சடிக்கும் பணிக்கு செலவு குறித்து விலைப்புள்ளியானது இவ்வலுவலக ந.க.எண் 2494/2014/சி1, நாள் 13.05.2020 ல் கோரப்பட்டதை 15.05.2020 ல் மூன்று விலைப்புள்ளிகள் பெறப்பட்டதின் ஒப்பு நோக்குப்பட்டியல் மன்றத்தின் பார்வைக்கு அனுமதிக்கும்,

| வ.எண் | விலைப்புள்ளிதாரரின் பெயர் மற்றும் முகவரி | விலைப்புள்ளி நிர்ணயம் செய்த தொகை (ரூ) |
|---|---|---|
| 1 | M/S பழனியப்பா கம்ப்யூட்டர் ஆப்செட் பிரிண்டர்ஸ், இடைப்பாடி | ரூ.65000 /- |
| 2 | M/S சத்யசாய் பிரிண்டர்ஸ் , இடைப்பாடி. | ரூ.68500 /- |
| 3 | M/S அருள் முருகன் பிரிண்டர்ஸ், இடைப்பாடி. | ரூ.70000 /- |

வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் வரிசை எண் : 1 ல் கண்ட M/S பழனியப்பா கம்ப்யூட்டர் ஆப்செட் பிரிண்டர்ஸ், இடைப்பாடி என்பவரது விலைப்புள்ளி மற்ற இரண்டு விலைப்புள்ளியை விட குறைவாக உள்ளதால் மேற்கண்ட விலைப்புள்ளியை ஏற்கலாம். பணி மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கு வைக்கப்பட்டுள்ளது.

அலுவலககுறிப்பு

1) மன்றம் அனுமதிக்கலாம்.

2) தனி அலுவலர் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கி பணி மேற்கொள்ளவதை மன்றம் அனுமதி அனுமதிக்கலாம்.

(ந.க.எண் 2494/2014/சி1)

பொருள் 4

இடைப்பாடி நகராட்சி JICA புதிய குடிநீர் அபிவிருத்தி திட்டத்தில் செய்து முடிக்கப்பட்ட தலைமை குடிநீர் நிலையம், வீட்டு வசதி வாரிய நீர்த்தேக்க தொட்டி பராமரிப்பு மற்றும் பிரதான குழாய்கள் பராமரிப்பு ஆகிய பணிகளை ஒப்பந்த அடிப்படையில் பணியாளர்களை கொண்டு பராமரிப்பு பணிகள் செய்ய பார்வையில் காணும் உதவிப் பொறியளார் அவர்களில் குறிப்பில் தொவித்துள்தன் படி 01.07.2020 முதல் 30.11.2020 வரை பணிகள் மேற்கொள்ள மதிப்பீடு ரூ.9,90,000/–க்கு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தில் 2016–2017 செந்தூர விலைப்பட்டியல் விலை விகிதத்திலேயே பணி செய்ய ஒப்பந்தப்புள்ளி கோரி மேல்நடவடிக்கை தொடரவும் மன்றம் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.ந

அலுவலககுறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. JICA குடிநீர் திட்ட பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள ஆகும் செலவுத்தொகை ரூ.9,90,000/–யை ஒதுக்கீடு செய்யவும், இச்செலவினத்தினை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து 01.07.2020 முதல் 30.11.2020 வரை மேற்கொள்ளவும், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் 2016–2017 செந்தூர விலைப்பட்டியல் விலை விகிதத்தில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.1013/இ2/2020)

தனி அலுவலர் மற்றும் ஆணையாளர்,
இடைப்பாடி நகராட்சி.

# இடைப்பாடி நகராட்சி

## 15.06.2020ம் தேதிய நடைபெற்ற நகர்மன்ற கூட்ட நடவடிக்கைகளின் விபரம்

பொருள் 1

இடைப்பாடி நகராட்சி எல்லைக்குட்பட்ட இடைப்பாடி கிராமம் புல எண் 62/5, விஸ்தீர்ணம் 0.90.5 ஹெக்டேர், தோப்பு புறம்போக்கு வார்டு D, TSNo: 5/12 தோப்பு சுடுகாடு என வகைப்பாடு செய்யப்பட்டுள்ள நிலத்திலிருந்து 0.40.5 ஹெக்டேர் நிலத்தினை பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்புத்துறை சேலம் அவர்கள் மூலம் நகர்புற ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க நில உரிமம் மாற்றம் செய்ய நகராட்சிக்கு தடையின்மையை இடைப்பாடி வட்டாட்சியர் அவர்கள் கடித ந.க.எண் 1214/2020(அ2) நாள் 01.06.2020ந் தேதிய கடிதத்தில் கோரியுள்ளார்கள். மேற்கண்ட இடத்தில் பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்புத்துறை சேலம் அவர்களின் மூலம் நகர்புற ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க நில உரிமம் மாற்றம் செய்ய இந்நகராட்சிக்கு ஆட்சேபனை ஏதுவும் இல்லை என்பதற்கு மன்றத்தின் ஒப்புதலுக்காக வைக்கப்படுகிறது.

அலுவலககுறிப்பு – மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண் 1169/2020/அ2)

பொருள் 2

நகராட்சி அலுவலகத்தில் உள்ள Laser jet Pro M202 மற்றும் Pro 400 பிரண்டர்கள் 3 எண்ணிக்கைகள் மற்றும் இந்நகராட்சி கணிணி வசூல் மையத்தில் உள்ள TVS Dot Matrix பிரண்டர் 1 எண்ணிக்கை பழுதடைந்துவிட்டதால் அலுவலக பயன்பாட்டின் அவசர அவசியம் கருதி M/s.Intel Computers, Edappadi அவர்கள் மூலம் பணியை மேற்கொண்டமைக்கு செலவு தொகை ரூ.7,330/—யை என்னால் வழங்கப்பட்டது எனவும், மேற்காணும் தொகையை எனக்கு வழங்குமாறு கோரியுள்ளார்.

எனவே, மேற்கண்ட பணியின் அவசரம் அவசியம் கருதி மேற்கொண்டமைக்கும், செலவு தொகை ரூ.7,330/—யை இந்நகராட்சி உதவி கணினி திட்ட அமைப்பாளர், திரு. A.செல்வராஜ், அவர்களுக்கு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலககுறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. மேற்கண்ட பணியின் அவசரம் அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று மேற்கொண்டமைக்கும் செலவு தொகை ரூ.7,330/—யை நகராட்சி பொது நிதியிலிருந்து இந்நகராட்சி உதவி கணினி திட்ட அமைப்பாளர், திரு. A.செல்வராஜ், அவர்களுக்கு வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.3435/2019/இ2)

பொருள் 3

இந்நகராட்சி ஈப்பு வாகனம் எண்.TN 52 D 4129-ன் டயர்கள் 70,000 கிலோ மீட்டர் ஓடிவிட்டதால் நான்கு டயர்களும் தேய்மானம் ஏற்பட்டுவிட்டது. புதியதாக நான்கு டயர்கள் மற்றும் டியூப்புகள் புதியதாக மாற்றி தர கோரி திரு.கு.பெரியசாமி அவர்கள் கோரியுள்ளார்.

எனவே, ஈப்பு வாகனம் TN 52 D 4129-ல் உள்ள நான்கு டயர்கள் மற்றும் டியூப்புகள் புதியதாக மாற்ற ஆகும் உத்தேச செலவினம் தொகை ரூ.35,000/—க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலககுறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. மேற்கண்ட செலவு தொகையை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்காலம்.
3. மேற்கண்ட பணியின் அவசரம் அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று விலைப்புள்ளி கோரியதை மன்றம் அங்கீகரிக்கலாம். மேலும், குறைந்த விலைப்புள்ளியை ஏற்று பணி மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்

(ந.க.எண்.1124/2020/இ2)

தனி அலுவலர் மற்றும் ஆணையாளர்,
இடைப்பாடி நகராட்சி.

# இடைப்பாடி நகராட்சி

## 30.06.2020ம் தேதிய நடைபெற்ற நகர்மன்ற கூட்ட நடவடிக்கைகளின் விபரம்

பொருள் 1

இடைப்பாடி நகராட்சிப் பகுதிகளில் கொரோனா வைரஸ் நோய் பரவாமல் தடுக்க முன்னேச்சறிக்கை நடவடிக்கை மேற்கொள்ள சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் கடித ந.க.எண் 5437/ஜெ1/2020, நாள் 09.03.2020 சென்னை குடும்ப நல்வாழ்வு துறை கடித எண் 1714/பி1/2020 –36, நாள் 10.03.2020, சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் கடித ந.க.எண் 5437/ஜெ1/2020, நாள் 15.03.2020, சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் சுற்றறிக்கை மற்றும் கடித ந.க.எண் 5437/ஜெ1/2020, நாள் 23.03.2020 சேலம் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் ஆய்வு கூட்ட அறிவுரைகளின் படியும், அரசின் காணொளி வழிகாட்டுதலின் படியும், இந்நகராட்சி பகுதியில் உலகை அச்சுறுத்தும் நோவல் கொரோனா வைரஸ் தொற்று நோய் தடுப்பு பணிகளான பொது இடங்களில் கிருமி நாசினிகள் தெளித்தல், பொதுமக்களுக்கு விழிப்புணர்வு நிகழ்வுற்காக Flex Banner மற்றும் பாதகைகள் பொது மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தவும் மேலும் நகரத்தின் முக்கிய பகுதிகளான பேருந்து நிலையம், அரசு அலுவலங்கள் பள்ளி நிறுவனங்கள், பொது கழிப்பிடங்கள், கல்யாண மண்டபங்கள், கடை தெருக்கள், மற்றும் சந்தை பகுதிகளில் விழிப்புணர்வு செய்தல் போன்ற அன்றாட பணிகள் செய்வதற்கும், சுகாதார பணியாளர்கள் மூலம் செய்யப்படும் நோய்தடுப்பு பணிகளுக்கு பணியின் போது அவர்களை பாதுகாப்பு செய்திட முகவுரை, கையுரை போன்றவைகள் மற்றும் பொது சுகாதார பயன்பாட்டிற்கு தேவைப்படும் பல்வேறு வகையிலான கீழ்கண்ட அட்டவணைப்படியான பொருட்களை

| வ.எண் | பொருளின் விபரம் |
|---|---|
| 1. | லைசால் ( Lysol) |
| 2. | Sodium Hypo Chloride |
| 3. | முகவுரை (Cotton mask) |
| 4. | கையுரை (Cotton Gloves) |
| 5. | டெட்டால் சோப் (Dettol soap) |
| 6. | நீர் தெளிப்பான் (Motor Sprayer) |
| 7. | மிஸ்ட் புளேயர் தெளிப்பான் (Mist Blower Sprayer) |
| 8. | சோப் ஆயில் (Soap Oil) |
| 9. | முழு உடல் உறை (PPE KIT) |
| 10. | கை சுத்திகரிப்பன் (Hand Sanitiser) |
| 11. | இன்பாரெட் தெர்மா மீட்டர் (Infored Thermo Meter) |
| 12. | மிஸ்ட் ப்ளோயர் ( Mist Flower ) |
| 13. | N95 முககவசங்கள் |
| 14. | அடையாள அட்டை ( ID CARD ) |
| 15. | பல்வேறு லிட்டர் அளவுகளிலான ஸ்பிரேயர்கள் |
| 16. | Vehicle Mount Mist Flower Machine with Genset |
| 17. | Bleaching powder |
| 18. | நீர்த்த சுண்ணாம்பு தூள் |
| 19. | கலர் பிரிண்டர் நோட்டீஸ் |
| 20. | வால்போஸ்ட் மல்டி கலர் |
| 21. | Flex பேனர் ரீப்பருடன் |
| 22. | Corona ஆடியோ விளம்பரம் பதிவு செய்வது |
| 23. | Auto மூலம் Corona ஆடியோ விளம்பரம் செய்வது |
| 24. | நோய் தடுப்பு தொடர்பான இதர செலவினங்கள் |

மேற்கண்ட பணிகள் யாவும் பலவகை தரப்பட்ட கொள்முதல் செய்தல், தயாரித்தல் விளம்பரம் செய்தல் போன்றவைகளாக இருப்பதாலும், அரசு அறிவித்துள்ள தடையுத்திரவு அமுலில் உள்ளதால் இவைகளை கொள்முதல் மற்றும் தயார் செய்ய இடையூறுகள் உள்ளதாலும், அவசர அவசியம் கருதி பணிகளை உடனுக்குடன் செய்ய வேண்டி உள்ளதால், ஒப்பந்ததாரர்களிடம் ஒப்பந்தப்புள்ளி / விலைப்புள்ளி அடிப்படையில் பணிகளை மேற்கொள்ளவும், மேற்படி பணிகளுக்கு உத்தேச செலவினம் ரூ 10.00 இலட்சத்துக்கு மன்ற அனுமதி வேண்டி வைக்கப்பட்டதினை அடுத்து அவசர அவசியங்கள் காரணமாகவும், இயற்கை பேரிடர் நோய் தடுப்பின் தீவிரத்தை கட்டுப்படுத்தும் பொருட்டும், நகரில் நோய் பரவல் அதிமாக இருக்கும் காரணத்தாலும் தனி

அலுவலரின் முன் அனுமதி பெற்று மேற்கண்ட பல்வேறு செலவினங்கள் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையிலும், மேலும் இந்நோய் தொடர்ச்சியாக பரவி வருவதால் செலவினங்கள் தொடர்ச்சியாக செய்யப்பட வேண்டியுள்ளதால், ஏற்கனவே மன்ற முன் அனுமதியின்படி செய்யப்பட்ட கூடுதல் செலவினங்கள் மற்றும் வரும் காலங்களில் கொரோனா தடுப்பு பணிகள் செய்திட தோராய உத்தேச செலவினங்கள் என மொத்தம் 75.00 இலட்சங்களுக்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலககுறிப்பு

1) தனி அலுவலரின் முன்அனுமதியின்படி செய்யப்பட்ட பணிகளையும் கூடுதல் செலவினங்களையும் மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்படி பணியின் தொடர் அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் அனுமதி பெற்று அவ்வப்போது பணிகளை மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.
3) மேற்கண்ட பணிகள் இயற்கை பேரிடர் நோய் தடுப்பின் தீவிரத்தை கட்டுப்படுத்தும் அத்தியாவசிய பணிகளாக இருப்பதாலும், உடன் அவசர கால நடவடிக்கையாக செய்யப்பட வேண்டியுள்ளதாலும் ஒப்பந்ததாரர்கள் ஒப்பந்தப்புள்ளி / விலைப்புள்ளி மூலம் பணிகளை மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம்.

பொருள் 2

இந்நகராட்சிக்கு சொந்தமான பேருந்து நிலையத்தின் கிழபுறம் காலியாக உள்ள ஐ.டி.எஸ்.எம்.டி திட்ட கடை எண் 56—க்கு ஒப்படைக்கும் நாள் முதல் மூன்றாண்டு கால உரிமத்திற்கு ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதற்கு 05.06.2020ந் தேதி ஏலம் கோர எவரும் முன்வராத நிலையில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மட்டும் பெறப்பட்டதன் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரியவர்களின் பெயர் மற்றும் முகவரி | கடையின் விபரம் | உச்ச ஏலக்கேள்வி | உச்ச ஒப்பந்தப்புள்ளி கேள்வி |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| 1) | திரு.எம்.பழனி த/பெ.முனியன், 239/2, போடிநாயக்கன்பட்டி, இடைப்பாடி | IDSMT கடை எண் —56 | — | ரூ2010/— |
| 2) | திரு.கு.பாலமுருகன், த/பெ.குருசாமி, 45/E4, நைனாம்பட்டி ரோட்டுத்தெரு, வெள்ளாண்டிவலசு, இடைப்பாடி | IDSMT கடை எண் —56 | — | ரூ2450/— |

அலுவலககுறிப்பு

1) அனுமதிக்கலாம்.
2) அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன்அனுமதி பெற்று உச்ச ஒப்பந்தப்புள்ளி கோரிய திரு.கு.பாலமுருகன் த/பெ.குருசாமி, என்பவரின் உச்ச ஒப்பந்தப்புள்ளி கேள்வியை அங்கீகரிக்கலாம்.
(ந.க.எண் 539/2020/பி4)

பொருள் 3

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 19, நைனாம்பட்டி CSI சர்ச் பகுதியில் உள்ள மினி பவர் பம்ப் மோட்டார் பழுதடைந்துள்ளதை புதிய உதிரிப் பொருட்களை கொண்டு சரி செய்து இயக்கி காட்டும் பணிக்கு லேபர் சார்ஜ் உட்பட ஆகும் செலவு குறித்து விலைப்புள்ளியானது இவ்வலுவலக ந.க.எண் 0782/2020/இ1, நாள் 26.05.2020ல் கோரப்பட்டதை தொடர்ந்து 08.06.2020ல் மூன்று விலைப்புள்ளிகள் பெறப்பட்டதின் ஒப்புநோக்குப்பட்டியல் மன்றத்தின் பார்வைக்கு அனுமதிக்கும்.

| வ.எண் | விலைப்புள்ளிதாரரின் பெயர் மற்றும் முகவரி | விலைப்புள்ளி நிர்ணயம் செய்த தொகை ரூ |
|---|---|---|
| 1 | திருமதி.கன்னிகா, பூலாம்பட்டி | ரூ10900/— |
| 2 | M/S எ.கே பவர் பாய்ண்ட், இடைப்பாடி | ரூ11550/— |
| 3 | M/S எம்.கே.எம் இன்ஜினியரிங் ஒர்க்ஸ், இடைப்பாடி | ரூ12150/— |

வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் வரிசை எண் 1ல் கண்ட திருமதி.கன்னிகா, பூலாம்பட்டி என்பவரது விலைப்புள்ளி மற்ற இரண்டு விலைப்புள்ளியை விட குறைவாக உள்ளதால் மேற்கண்ட நிறுவனத்திற்கு பணி உத்திரவு வழங்கி பணி மேற்கொள்ள மன்றம் அனுமதி அளிக்கலாம்.

அலுவலககுறிப்பு

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) பொது மக்கள் நலன் கருதி மேற்காணும் பணியை மன்ற முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கி பணி மேற்கொள்ளவும் பணிக்கான செலவினத் தொகையை நகராட்சி குடிநீர் நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண் 0782/2020/இ1)

பொருள் 4

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 25, கவுண்டம்பட்டி மாரியம்மன் கோவில் அருகில் உள்ள மினி பவர் பம்ப் மோட்டார் பழுதடைந்துள்ளதை புதிய உதிரிப் பொருட்களை கொண்டு சரி செய்து இயக்கி காட்டும் பணிக்கு லேபர் சார்ஜ் உட்பட ஆகும் செலவு குறித்து விலைப்புள்ளியானது இவ்வலுவலக ந.க.எண் 0983/2020/இ1, நாள் 26.05.2020ல் கோரப்பட்டதை தொடர்ந்து 08.06.2020ல் மூன்று விலைப்புள்ளிகள் பெறப்பட்டதின் ஒப்புநோக்குப்பட்டியல் மன்றத்தின் பார்வைக்கு அனுமதிக்கும்.

| வ.எண் | விலைப்புள்ளிதாரரின் பெயர் மற்றும் முகவரி | விலைப்புள்ளி நிர்ணயம் செய்த தொகை ரூ |
|---|---|---|
| 1 | திருமதி.கன்னிகா, பூலாம்பட்டி | ரூ4000/– |
| 2 | M/S எ.கே பவர் பாய்ண்ட், இடைப்பாடி | ரூ4300/– |
| 3 | M/S எம்.கே.எம் இன்ஜினியரிங் ஒர்க்ஸ், இடைப்பாடி | ரூ4600/– |

வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் வரிசை எண் 1ல் கண்ட திருமதி.கன்னிகா, பூலாம்பட்டி என்பவரது விலைப்புள்ளி மற்ற இரண்டு விலைப்புள்ளியை விட குறைவாக உள்ளதால் மேற்கண்ட நிறுவனத்திற்கு பணி உத்திரவு வழங்கி பணி மேற்கொள்ள மன்றம் அனுமதி அளிக்கலாம்.

அலுவலககுறிப்பு

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) பொது மக்கள் நலன் கருதி மேற்காணும் பணியை மன்ற முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கி பணி மேற்கொள்ளவும், பணிக்கான செலவினைத் தொகையை நகராட்சி குடிநீர் நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண் 0933/2020/இ1)

பொருள் 5

இந்நகராட்சிக்கு சொந்தமான பேருந்து நிலையம் வடக்கு பார்த்த IDSMT கடை எண் – 52ன் குத்தகை காலம் 09.07.2020 உடன் முடிவடைவதை தொடர்ந்து தற்போதைய குத்தகைதாரர் திரு.ஆ.கஜேந்திரன் என்பவருக்கு தற்போதைய குத்தகை தொகையில் இருந்து 15% சதவீதம் வாடகை உயர்த்தி கொடுக்க இவ்வலுவலக கடித ந.க.எண் 1008/2020/பி4, நாள் 02.06.2020ந் தேதி அறிவிப்பு வழங்கப்பட்டது. மேற்கண்ட கடை எண் 52–ன் குத்தகைதாரர் தனது 12.06.2020ந் தேதிய கடிதத்தில் கடையினை தொடர்ந்து நடத்த இயலாத காரணத்தால் 09.07.2020ந் தேதியுடன் நகராட்சி வசம் திருப்பி ஒப்படைப்பதாக தெரிவித்துள்ளார். எனவே மேற்கண்ட கடை எண் 52–க்கு ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோர மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகுறிப்பு

1) அனுமதிக்கலாம்.
2) அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று IDSMT கடை எண் –52யை ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரியமைக்கும் மன்றம் அங்கீகாரம் வழங்கலாம்.

(ந.க.எண் 1008/2020/பி4)

பொருள் 6

இந்நகராட்சி ஈப்பு வாகனம் எண்.TN 52 D 4129-ன் டயர்கள் 70,000 கிலோ மீட்டர் ஓடிவிட்டதால் நான்கு டயர்களும் தேய்மானம் ஏற்பட்டுவிட்டது. புதியதாக நான்கு டயர்கள் மற்றும் டியூப்புகள் புதியதாக மாற்றி தரும் பணிக்கு 12.06.2020ம் தேதியில் வரப்பெற்ற விலைப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியலை கீழ்கண்ட விபரப்படி மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | பணியின் பெயர் | செலவு தொகை ரூ. | நிறுவனத்தின் பெயர் | விலைப்புள்ளி தொகை ரூ. |
|---|---|---|---|---|
| 1. | இந்நகராட்சி ஈப்பு வாகனம் எண்.TN 52 D 4129க்கு புதியதாக நான்கு டயர்கள் மற்றும் டியூப்புகள் புதியதாக மாற்றி தரும் பணிக்கு | ரூ.35,000/– | M/s. Central Tyres, Salem | ரூ.31,850/– |
| | | | M/s.Tyre Center, Salem | ரூ.32,750/– |
| | | | M/s.Tyre Plus, Salem | ரூ.32,900/– |

**அலுவலககுறிப்பு:**

1. மேற்கண்டவாறு வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் ரூ.31,850/– என குறைவாக விலைப்புள்ளி கொடுத்துள்ள M/s. Central Tyres, Salem நிறுவனத்தின் விலைப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.
2. மேற்கண்ட பணியின் அவசியம் அவசரம் கருதி நகர்மன்ற தனி அலுவலரின் முன்அனுமதி பெற்று செலவு தொகை ரூ.31,850/– வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

(ந.க.எண்.1124/2020/இ2)

பொருள் 7

இடைப்பாடி நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கொரோனா வைரஸ் பொதுமக்களிடையே பரவுவதையே தவிர்க்கும் பொருட்டும் நகரில் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்5437/ஜே2/2020–21, நாள் 15.04.2020–ல் தனிமைப்படுத்தப்பட்டு விடுகளிலிருந்து பெறப்படும் கழிவுகளை அங்கிகரிக்கப்பட்ட எரியூட்டும் நிலையத்திற்கு நேரடியாக அன்றாடம் அனுப்பப்பட வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது. தமிழ்நாடு மாசுகட்டுப்பாட்டு வாரியம் அவர்களின் கடிதம் Lr.No.T4/TNPCB/007641/BMWM 2020–ல் இந்நகராட்சிக்கு Ramky Energy and Environment Ltd Salem என்ற நிறுவனத்திடம் தனிமைப்படுத்தப்பட்ட வீடுகளிலிருந்து பெறப்படும் கழிவுகளை ஒப்படைக்குமாறும் அதற்கான கட்டணம் மாதம் ஒன்றுக்கு ரூ20000/– வீதம் வழங்குமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே தனிமைப்படுத்தப்பட்ட வீடுகளிலிருந்து பெறப்படும் கழிவுகளை அங்கீகரிக்கப்பட்ட எரியூட்டும் நிலையத்திற்கு நேரடியாக அன்றாடம் அனுப்ப ஆகும் உத்தேச செலவினம் ரூ120000/–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலககுறிப்பு – மன்றம் பதிவு செய்யலாம்.

(ந.க.எண் 450/2020/எச்1)

பொருள் 8

இடைப்பாடி நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் இயங்கிவரும் கழிவுநீர் வாகனம் TN 52 L.0984–ன் தகுதிசான்று 10.04.2020ம் தேதியுடன் முடிவடைவதால் 11.04.2020 முதல் ஓராண்டு காலத்திற்கு தகுதிசான்று பெற வாகனத்தில் ஏற்பட்டுள்ள பழுதுகளை நிவர்த்தி செய்யவும், மேற்கண்ட பணிகளை அரசு அங்கீகாரம் பெற்ற பணிமனைகளில் ஒப்பந்தப்புள்ளி கோரவும் அதற்கான உத்தேச செலவினம் ரூ140000/–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலககுறிப்பு – மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண் 410/2020/எச்1)

பொருள் 9

இந்நகராட்சி பொது சுகாதார பிரிவில் இயங்கி வரும் மினி கழிவு நீர் வாகனம் TN52L0984 தகுதிசான்று பெற பழுதுகள் சரிசெய்ய ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு ந.க.எண் 410/2020/எச்1, நாள் 01.06.2020ன்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் 17.06.2020ல் வரப்பெற்றது. அதன்விபரம் கீழ்கண்டவாறு.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | மதிப்பீடு | தொகை |
|---|---|---|---|
| 1 | லட்சுமி ஆட்டோ டீசல் ஒர்க்ஸ், மேட்டூர் டேம் | ரூ140000/– | ரூ134850/– |
| 2 | J.V.K. ஆட்டோ டீசல் ஒர்க்ஸ், சேலம் | | ரூ141580/– |

மேற்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய லட்சுமி ஆட்டோ டீசல் ஒர்க்ஸ் மேட்டூர் டேம் என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலககுறிப்பு

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்படி செலவினம் பொது நிதியில் இருந்து மேற்கொள்ளவும், குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய நிறுவனத்திற்கு தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

பொருள் 10

இந்நகராட்சியில் துப்புரவு பணியாளர்களாக பணிபுரிந்து வயது முதிர்வின் காரணமாக 30.06.2020ல் பணி ஓய்வு பெறும் கீழ்கண்ட பணியாளர்கள்

| வ.எண் | பெயர் திருவாளர்கள் | பதவி |
|---|---|---|
| 1 | ஈஸ்வரி க/பெ.ராஜூ | துப்புரவு பணியாளர் |
| 2 | ஜெயா க/பெ.நடராஜன் | துப்புரவு பணியாளர் |
| 3 | கந்தாயி க/பெ.அற்புதராஜ் | துப்புரவு பணியாளர் |
| 4 | குஞ்சு த/பெ.செங்கோடன் | துப்புரவு பணியாளர் |

ஆகியோர்களுக்கு அரசாணை எண் 42 நிதி (ஓய்வூதியம்)த்துறை நாள் 15.09.20000ல் தெரிவித்துள்ளவாறு (SPF) சிறப்பு வருங்கால வைப்பு நிதி அரசு பங்குத்தொகை ரூ10000/– வீதம் 4 நபர்களுக்கு ரூ40000/– வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலககுறிப்பு – மன்றம் அனுமதிக்கலாம்

(ந.க.எண் 1221/2020/பி3)

பொருள் 11

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 19, நைனாம்பட்டியில் ரோட்டின் மத்தியில் உள்ள மின்கம்பத்தை ரோட்டின் ஓரமாக மாற்றி அமைப்பதற்காக இந்நகராட்சி ஆர்.கதிர்வேல், மின்கம்பியாளர் கோரியதை தொடர்ந்து மேற்படி மின்கம்பத்தினை பொதுமக்கள் நலன் கருதி மாற்றி தருமாறு இவ்வலுவலக கடிதம் ந.க.எண் 0415/2020/இ1, நாள் 01.06.2020ன் படி கேட்டுக்கொள்ளப்பட்டதை தொடர்ந்து, உதவிப்பொறியாளர், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம், இடைப்பாடி என்பவரிடமிருந்து மின்கம்பத்தினை இடம் மாற்றம் செய்ய கட்டணமாக ரூ70140/–யை தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்திற்கு செலுத்துமாறு கேட்பு பெறப்பட்டதை தொடர்ந்து பொதுமக்கள் நலன் கருதி மேற்கண்ட தொகையினை மன்ற முன்அனுமதி பெற்று மின்சார வாரியத்திற்கு செலுத்திடவும், பொதுமக்கள் நலன் கருதி மேற்கண்ட கம்பத்தினை மாற்றம் செய்யவும் மன்ற முன் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலககுறிப்பு

இந்நகராட்சிப் பொதுமக்கள் நலன் கருதி கம்பத்தினை மாற்றம் செய்யயும், மேற்கண்ட தொகையான ரூ70140/– யை மின்சார வாரியத்திற்கு மன்ற முன் அனுமதி பெற்று செலுத்த மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.

(ந.க.எண் 0415/2020/இ1)

பொருள் 12

இடைப்பாடி நகராட்சி வெள்ளாண்டிவலசு பகுதியில் முதலீட்டு மான்ய நிதி 2017–18 திட்டத்தில் புதியதாக கட்டப்பட்டு வரும் அலுவலக கட்டிட பணி தற்பொழுது முடிவடையும் தருவாயில் உள்ளது. அலுவலக கட்டிதத்திற்கு புதியதாக மின் இணைப்பு பெற 25.02.2020ல் விண்ணப்பம் வழஙகப்பட்டு பதிவு கட்டணம் ரூ.10,518/–யை ஒப்பந்ததாரர் M/s.SS Associates, Salem அவர்கள் மூலம் செலுத்தப்பட்டு பதிவு செய்யப்பட்டது. (பதிவு எண்.1090320394).

உதவி பொறியாளர், இயக்கமும் பராமரிப்பும், TANGEDCO, இடைப்பாடி டவுன், அவர்களின் 19.06.2020 தேதிய கேட்பு அறிவிப்பின் புதிய அலுவலக கட்டிடத்திற்கு புதிய மின் இணைப்பு பெற கீழ்காணும் விபரப்படி தொகை செலுத்த தெரிவிக்கப்பட்டுள்ளது.

| S.No. | Description of Charges | Amount in Rs. |
|---|---|---|
| 1. | 48100-CC Deposit | 45600.00 |
| 2. | 55101-Development Charges | 76000.00 |
| 3. | 61955-Estimate Charges(61904e) | 92080.00 |
| | **Total** | **Rs.213680.00** |

எனவே, புதிய அலுவலக கட்டிடத்திற்கு புதிய மின் இணைப்பு பெற மேற்காணும் விபரப்படி தொகை ரூ.2,13,680/–யை மின் வாரியத்திற்கு செலுத்தவும் பதிவு கட்டணம் ரூ10,518.00 ஒப்பந்ததாருக்கு திருப்பி வழங்கவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட செலவு தொகையை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.
3. மேற்கண்ட செலவு தொகையை நகராட்சி தனிஅலுவலரின் முன்அனுமதி பெற்று மேற்கொண்டமைக்கும் மன்றம் அனுமதிக்கலாம்.
4. அலுவலக கட்டிதத்திற்கு புதியதாக மின் இணைப்பு பெற பதிவு கட்டணம் தொகை ரூ.10,518/—யை ஒப்பந்ததாரர் M/s.SS Associates, Salem அவர்களுக்கு வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 2948/2016/இ2)

பொருள் 13

இடைப்பாடி நகராட்சி 2020—2021ம் ஆண்டு குடிநீர் நிதியில் கீழ்கண்ட பணியை மேற்கொள்ள 24.06.2020ம் தேதியில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளை கீழ்கண்ட விபரப்படி மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூபாய் இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|---|---|
| 1. | JICA புதிய குடிநீர் அபிவிருத்தி திட்டத்தில் செய்து முடிக்கப்பட்ட தலைமை நீரேற்று நிலையம், வீட்டு வசதி வாரிய நீர்த்தேக்க தொட்டி பராமரிப்பு மற்றும் பிரதான குழாய்கள் பராமரிப்பு ஆகிய பணிகளை ஒப்பந்த அடிப்படையில் பணியாளர்களை கொண்டு பராமரிப்பு பணிகள் செய்தல் | 9.90 | P. சுப்ரமணி, இடைப்பாடி | மதிப்பீட்டை விட 0.08 சதவீதம் குறைவு |
| | | | A.செங்கோடையன் | மதிப்பீட்டை விட 0.77 சதவீதம் அதிகம் |

**அலுவலக குறிப்பு.**

மேற்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட 0.08 சதவீதம் அதிகம் ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள P.சுப்ரமணி, இடைப்பாடி. ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.
(ந.க.எண்.1013/2020/இ2)

பொருள் 14

இடைப்பாடி நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 03, ஆவணியூர் வடக்குதெரு விநாயகர் கோவில் அருகில் உள்ள ஆழ்துளை கிணறு, ஆவணியூர் பிச்சைமுத்து வீட்டு அருகில் உள்ள ஆழ்துளை கிணறு மற்றும் ஆவணியூர் கோட்டையில் உள்ள ஆழ்துளை கிணறுகளில் உள்ள கைபம்புகளை அகற்றிவிட்டு மினி பவர்பம்ப் அமைக்கும் பணிகளுக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ6.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. மேலும் மேற்கண்ட பணிகளை பொது மக்கள் நலன் கருதி குடிநீர் நிதியில் நிதி ஒதுக்கீடு செய்து பணிகளை மேற்கொள்ளவும் மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.
அலுவலககுறிப்பு — மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண் 1125/2020/இ1)

பொருள் 15

இடைப்பாடி நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 04,07,08 மற்றும் 24 பகுதியில் முறையான பகிர்மான குழாய்கள் இல்லாத நிலை உள்ளதால் அப்பகுதி மக்களுக்கு முறையான குடிநீர் செல்லாத நிலை உள்ளது. எனவே அப்பகுதிக்கு புதியதாக சுலிஸ் வால்வு மற்றும் பகிர்மான குழாய்கள் அமைக்கும் பணிக்கு ஆகும் மதிப்பீட்டு தொகை ரூ9.90 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டுள்ளது. மேலும் மேற்கண்ட பணிகளை குடிநீர் நிதியில் உடனே மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.
அலுவலககுறிப்பு

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) முன் அனுமதி பெற்று மேற்கண்ட பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளி கோரவும் மேற்கண்ட பணிகளை குடிநீர் நிதியில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண் 0921/2020/இ1)

பொருள் 16

இந்நகராட்சி வார்டு எண் 3 ஆவணியூர் கோட்டை மற்றும் வார்டு எண்10, தாவாந்தெரு பகுதியில் உள்ள குறுக்கு சாலைகளில் மழைநீர் வடிகால் வசதி இல்லாமல் கழிவு நீர் சாலைகளில் இருபுறங்களிலும் தேங்கி மிகவும் சுகாதார சீர்கேடு உருவாகும் நிலை உள்ளது. ஆகையால் அப்பகுதியில் மழைநீர் வடிகால் மற்றும் சிமெண்ட் சாலை அமைக்க தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ6.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.
அலுவலககுறிப்பு
1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட செலவு தொகையை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்1125/2020/இ2)

பொருள் 17

இடைப்பாடி நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கொரனா வைரஸ் பொதுமக்களிடையே பரவுவதையே தவிர்க்கும் பொருட்டும் நகரில் பொது சுகாதாரத்தை மேம்படுத்தவும் கீழ்கண்ட நோய்தடுப்பு மருந்துகள் கிருமி நாசினிகள் மற்றும் உபகரணங்கள் மற்றும் பலவகைப்பட்ட இனங்கள் அவசர அவசியமாக கொள்முதல் செய்ய இந்நகராட்சி பலவகைப்பட்ட பொருட்கள் விநியோகம் செய்யும் ஒப்பந்ததாரரிடம் விலைப்புள்ளி கோரப்பட்டதில் 29.06.2020ல் மூன்று விலைப்புள்ளிகள் பெறப்பட்டதின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும்

**<u>பொருட்களின் விபரம்</u>**

| வ.எண் | பொருளின்விபரம் | பொருட்களின் அளவு | ஸ்ரீகாளியம்மன் டிரேடிங் கார்பரேசன் நாமக்கல் | ஸ்ரீ அக்ஷயா டிரேடர்ஸ் திருச்சி | ஸ்ரீ அத்தனூர் அம்மன் டிரேடர்ஸ் நாமக்கல் |
|---|---|---|---|---|---|
| 1. | முகவுரை (Cotton mask) | 1 எண்ணிக்கை | ரூ9.50 | ரூ12.00 | ரூ10.20 |
| 2. | கையுரை (Cotton Gloves) | 1 எண்ணிக்கை | ரூ13.40 | ரூ14.00 | ரூ13.80 |
| 3. | லைசால் ( Lysol) | 1 லிட்டர் | ரூ175.00 | ரூ195.00 | ரூ190.00 |
| 4. | சோடியம் ஹைபோ குளோரைடு | 1 லிட்டர் | ரூ14.55 | ரூ18.50 | ரூ18.00 |
| 5. | இன்பாரெட் தெர்மா மீட்டர் (Infored Thermo Meter) | 1 எண்ணிக்கை | ரூ4800.00 | ரூ5050.00 | ரூ4950.00 |
| 6. | பல்ஸ் ஆக்ஸி மீட்டர் கருவி | 1 எண்ணிக்கை | ரூ2900.00 | ரூ3250.00 | ரூ3100.00 |
| 7. | கபசர குடிநீர் பவுடர் | 1 கிலோ | ரூ736.60 | ரூ750.00 | ரூ745.00 |
| 8. | நிலவேம்பு கசாய பவுடர் | 1 கிலோ | ரூ580.35 | ரூ610.00 | ரூ595.00 |

வரப்பெற்ற மூன்றுவிலைப்புள்கிளில் ஒப்பந்ததாரர் ஸ்ரீ காளியம்மன் டிரேடிங் கார்பரேசன், நாமக்கல் என்பவரது விலைப்புள்ளி குறைவாக உள்ளதால் மேற்படியாளருக்கு பணி உத்திரவு வழங்கி பணி மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலககுறிப்பு

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்படி குறைந்த விலைப்புள்ளி வழங்கிய ஸ்ரீ காளியம்மன் டிரேடிங் கார்பரேசன், நாமக்கல் அவர்களுக்கு தனி அலுவலர் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியமைக்கும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

(ந.க.எண் 450/2020/எச்1)

பொருள் 18

இடைப்பாடி நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் அமைந்துள்ள பிரதான மற்றும் பகிர்மான குழாய்களில் அடிக்கடி பழுதுகள் ஏற்பட்டு விநியோகம் செய்ய இயலாத நிலை உள்ளதால் பிரதான மற்றும் பகிர்மான குழாய்களில் ஏற்படும் பழுதுகளை உபரி பொருட்கள் கொண்டு சரி செய்யும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளியானது இவ்வலுவலக ந.க.எண். 2844/2019/இ1, நாள் 12.11.2019ல் கோரப்பட்டதை தொடர்ந்து 03.12.2019 ல் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்பு நோக்குப்பட்டியல் மன்றத்தின் பார்வைக்கு அனுமதிக்கும்.

| வ.எண் | ஒப்பந்ததாரரின் பெயர் மற்றும் முகவரி | மதிப்பீட்ட் தொகை | விலைப்புள்ளி நிர்ணயம் செய்த தொகை ரூ |
|---|---|---|---|
| 1 | திரு.பி.மணி, ஒப்பந்ததாரர், இடைப்பாடி | ரூ5.00 இலட்சம் | ரூ0.15 % மதிப்பீட்டைவிட குறைவு |
| 2 | திரு.எஸ்.சக்திவேல், ஒப்பந்ததாரர், இடைப்பாடி | | ரூ0.25 % மதிப்பீட்டைவிட குறைவு |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண். 1ல் கண்ட திரு.பி.மணி ஒப்பந்ததாரர், இடைப்பாடி என்பவரது ஒப்பந்தப்புள்ளி திரு.எஸ்.சக்திவேல், ஒப்பந்ததாரர், இடைப்பாடி என்பவரது ஒப்பந்தப்புள்ளியைவிட குறைவாக உள்ளதால் மேற்காணும் திரு.பி.மணி, ஒப்பந்ததாரர், இடைப்பாடி என்பவருக்கு பணி உத்திரவு வழங்கி பணி மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

அலுவலககுறிப்பு

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) பொது மக்கள் நலன் கருதி மேற்காணும் பணியை மன்ற முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கி பணி மேற்கொள்ளவும், பணிக்கான செலவினத்தொகையை நகராட்சி குடிநீர் நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.2844/2019/இ1)

பொருள் 19

இடைப்பாடி நகராட்சியில் தூய்மை பாரத திட்டம் (SBM) திடக்கழிவு மேலாண்மை திட்டம் (SWM) 2019–2020 இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் சேகரிக்கப்படும் மக்காத குப்பைகளில் மறுசுழற்ச்சி செய்ய இயலாத குப்பைகளை நவீன முறையில் அப்புறபடுத்த 10 TPD கொள்ளளவு கொண்ட நவீன எரியூட்டும் இயந்திரம் (Incineration plant) அமைக்கும் பணி மேற்கொள்ள 12.06.2020–ம் தேதியில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் கீழ்க்கண்ட விபரப்படி மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண். | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூபாய் இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப் புள்ளி சதவீதம் |
|---|---|---|---|---|
| 1 | இடைப்பாடி நகராட்சியில் தூய்மை பாரத திட்டம் (SBM) திடக்கழிவு மேலாண்மை திட்டம் (SWM) 2019–2020 இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் சேகரிக்கப்படும் மக்காத குப்பைகளில் மறுசுழற்ச்சி செய்ய இயலாத குப்பைகளை நவீன முறையில் அப்புறபடுத்த 10 TPD கொள்ளளவு கொண்ட நவீன எரியூட்டும் இயந்திரம் (Incineration plant) அமைக்கும் பணி | 100.00 | Mr.Z.Azad, Proprietor, Neptune Automation, 83/3.,84/1,A1, Vaikkal Road, Pallipalayam, Nasiyanur (PO), Erode-638107 | மதிப்பீட்டை விட 4.92 % அதிகம் |
| | | | M/s.Karthikeya Spinning & Weaving Mill Pvt Ltd, 484, Kamaraj Road, Uppilipalayam, Coimbatore-641015 | மதிப்பீட்டை விட 52.76 % அதிகம் |

மேற்கண்ட விபரப்படி 12.06.2020 அன்று இப்பணிக்கு மதிப்பீட்டை விட கூடுதலான இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன. இவ்விரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தபுள்ளியாக Mr.Z.Azad, Proprietor, Neptune Automation, 83/3.,84/1,A1, Vaikkal Road, Pallipalayam, Nasiyanur (PO), Erode-638107 அவர்கள் மதிப்பீட்டை விட கூடுதலாக 4.92 சதவீதம் ஒப்பந்தப்புள்ளி

வழங்கியுள்ளனர். மதிப்பீட்டை விட கூடுதலான ஒப்பந்தப்புள்ளி விலை விகிதத்தினை குறைத்து கொடுக்க கோரி 22.06.2020–ந் தேதியில் ஒப்பந்ததாரருக்கு (Negotiation letter) கடிதம் வழங்கப்பட்டது.

மேற்காணும் இப்பணிக்கு மதிப்பீட்டைவிட கூடுதலாக 4.92 சதவீதம் அதிகம் கொடுத்துள்ள Mr.Z.Azad, Proprietor, Neptune Automation, 83/3.,84/1,A1, Vaikkal Road, Pallipalayam, Nasiyanur (PO), Erode-638107 அவர்கள் மதிப்பீட்டை விட 0.08 சதவீதம் குறைவாக ஒப்பந்தப்புள்ளி விலை விகிதத்தினை குறைத்து பணியினை செய்வதற்கு 24.06.2020ம் தேதியில் கடிதம் கொடுத்துள்ளார் என்பதை கீழ்க்கண்ட விபரப்படி மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண். | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூபாய் இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப் புள்ளி சதவீதம் (After Negotiation) |
|---|---|---|---|---|
| 1 | இடைப்பாடி நகராட்சியில் தூய்மை பாரத திட்டம் (SBM) திடக்கழிவு மேலாண்மை திட்டம் (SWM) 2019–2020 இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் சேகரிக்கப்படும் மக்காத குப்பைகளில் மறுசுழற்ச்சி செய்ய இயலாத குப்பைகளை நவீன முறையில் அப்புறபடுத்த 10 TPD கொள்ளளவு கொண்ட நவீன எரியூட்டும் இயந்திரம் (Incineration plant) அமைக்கும் பணி | 100.00 | Mr.Z.Azad, Proprietor, Neptune Automation, 83/3.,84/1,A1, Vaikkal Road, Pallipalayam, Nasiyanur (PO), Erode-638107 | மதிப்பீட்டை விட 0.08% குறைவு |

மேற்காணும் விபரப் படி ஒப்பந்தப்புள்ளி விலை விகிதத்தினை மதிப்பீட்டை வட 0.08 சதவீதம் குறைத்து கொடுத்துள்ள Mr.Z.Azad, Proprietor, Neptune Automation, 83/3.,84/1,A1, Vaikkal Road, Pallipalayam, Nasiyanur (PO), Erode-638107 அவர்களின் விலை விகிதத்தினை மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட பணிக்கு Negotiation-க்கு பின்னர் மதிப்பீட்டை விட 0.08 சதவீதம் குறைவாக ஒப்பந்தப்புள்ளி விலை விகிதத்தினை குறைத்து வழங்கியுள்ள Mr.Z.Azad, Proprietor, Neptune Automation, 83/3.,84/1,A1, Vaikkal Road, Pallipalayam, Nasiyanur (PO), Erode-638107 அவர்களின் விலைப்புள்ளியினையும் மன்றம் அனுமதிக்கலாம்.
3. தூய்மை பாரத திட்டம் (SBM) திடக்கழிவு மேலாண்மை திட்டம் (SWM) 2019–2020–ல் ஒதுக்கியுள்ள நிதியினை விட கூடுதலாக ஆகும் செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.0045/2020/இ2)

தனி அலுவலர் மற்றும் ஆணையாளர்
இடைப்பாடி நகராட்சி

**இடைப்பாடி நகராட்சி**
**30.06.2020ம் தேதிய நடைபெற்ற நகர்மன்ற சிறப்பு கூட்ட நடவடிக்கைகளின் விபரம்**

பொருள் 1

சேலம் மாவட்டம் இடைப்பாடி நகராட்சி முதல் நிலை நகராட்சியாகவும், 2011 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி மக்கள் தொகை 54823 ஆகவும், பரப்பளவு 28.22 சதுர கிலோ மீட்டராகவும் 30 வார்டுகளை கொண்டதாகவும் செயல்பட்டு வருகிறது.

இடைப்பாடி நகராட்சிக்குட்பட்ட பகுதியில் பொதுப்பணித்துறை பராமரிப்பில் இரண்டு ஏரிகளும் நகராட்சி பராமரிப்பில் மூன்று ஏரிகளும் என மொத்தம் ஐந்து ஏரிகள் உள்ளன.

பொதுப்பணித்துறை அரசு கடிதம் எண் 8490/N1/2020-1 , நாள் 30.06.2020 –ல் அரசாணை எண் (Ms)எண்.193, பொதுப்பணித்துறை நாள் 12.11.2019ன்படி மேட்டூர் அணையில் இருந்து வரும் வெள்ள உபரிநீரினை சேலம் மாவட்டத்தில் உள்ள சரபாங்கா வடிநிலத்தில் மேட்டூர்,ஓமலூர், இடைப்பாடி மற்றும் சங்ககிரி ஆகி ய வட்டங்களில் உள்ள வறண்ட 100 ஏரிகளுக்கு நீரேற்றம் மூலம் நிரப்பி மொத்தம் 4238 ஏக்கர் நிலங்கள் பயன்பெரும் வகையில் பொதுப்பணித்துறையில் மூலம் ரூ565.00 கோடியில் திட்டம் செயல்படுத்தபட உள்ளது எனவும், மேட்டூர், ஓமலூர், இடைப்பாடி மற்றும் சங்ககிரி ஆகிய வட்டங்களில் உள்ள வறண்ட 100 ஏரிகளை பொதுப்பணித்துறையின் மூலம் புனரமைப்பு மற்றும் மேம்படுத்தும் பணிகளை செய்ய நிர்வாக அனுமதி மதிப்பீடு ரூ46.00 கோடிக்கு வழங்கப்பட்டுள்ளது எனவும், தெரிவிக்கப்பட்டு மேற்படி திட்டங்களின் கீழ் இடைப்பாடி நகராட்சி மூலம் பராமரிக்கப்பட்டு வரும் கீழ்கண்ட மூன்று ஏரிகளையும் புனரமைக்க ஏதுவாகவும், வரும் காலங்களில் நிரந்தரமாக பராமரிப்பு பணிகளை செய்யவும் பொதுப்பணித்துறைக்கு ஒப்படைக்கவும் கோரப்பட்டதற்கிணங்க, சேலம் மாவட்ட அரசிதழ் சிறப்பு வெளியீடு நாள் 16.06.2017 எண் 18ன்படி இடைப்பாடி நகராட்சி பராமரிப்பில் உள்ள கீழ்கண்ட மூன்று ஏரிகளை பொதுப்பணித்துறைக்கு நிரந்தரமாக ஒப்படைப்பு செய்வதற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | கிராமம் | ஏரி / குளம் / குட்டை / கண்மாய் பெயர் | புல எண் | மொத்த விஸ்தீரணம் | கட்டுப்பாட்டில் உள்ள துறை |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 (ஹெக்டேரில்) | 6 |
| 1 | எடப்பாடி | ஆலச்சம்பாளையம் சின்னஏரி ( எடப்பாடி சின்னஏரி) | 131 | 12.85.0 | நகராட்சி |
| 2 | ஆவணிப்பேரூர் மேற்கு | அச்சம்பட்டி ஏரி | 28 | 21.35.0 | நகராட்சி |
| 3 | ஆவணிப்பேரூர் மேற்கு | கொத்தப்பாளையம் சின்னஏரி (ஆவணிப்பேரூர் சின்னஏரி) | 78 | 12.83.0 | நகராட்சி |

அலுவலககுறிப்பு

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) பொதுப்பணி துறையின் மூலம் செயல்படுத்தப்படும் திட்டமான மேட்டூர் அணையில் இருந்து வரும் வெள்ள உபரி நீரினை நீரேற்றம் மூலம் இம்மூன்று ஏரிகளிலும் நீரினை நிரப்பி விவசாயத்திற்கு பயன்படுத்தி கொள்ளவும், இம்மூன்று ஏரிகளையும் இனி வரும் காலங்களில் பொதுப்பணி துறையின் மூலம் புனரமைப்பு மற்றும் பராமரிப்பு பணிகளை மேற்கொள்ளவும், நிரந்தரமாக பொதுப்பணித்துறைக்கு ஒப்படைப்பு செய்யவும் மன்றம் அனுமதிக்கலாம்.

பொருள் 2

இடைப்பாடி நகாரட்சியில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தில் (SBM) மக்காத குப்பைகளில் மறு சுழற்சி செய்ய இயலாத குப்பைகளை நவீன முறையில் அப்புறப்படுத்த 10 TPD கொள்ளளவு நவீன எரியூட்டும் இயந்திரம் (Incineration Plant) அமைக்கப்பட உள்ளது. மேற்கண்ட திட்டத்திற்கும் மற்றும் இடைப்பாடி நகராட்சி பகுதியிலிருந்து சரபங்கா நதியில் கலக்கும் கழிவு நீரினை சுத்திகரிப்பு செய்யவும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறை உத்தரவு ந.க.எண்.20170/2019/கே3, நாள்.19.03.2020–ல் 3.00 ஏக்கர் நிலம் இடைப்பாடி நகராட்சிக்கு முன்நுழைவு அனுமதி வழங்கி உத்திரவிடப்பட்டுள்ளது. மேற்படி 3.00 ஏக்கர் நிலம் மற்றும்

இடைப்பாடி நகராட்சி புதிய அலுவலக வளாக கட்டிடத்திலும் சுற்றுசுவர் அமைத்தல் பணிக்கு மதிப்பீடு ரூ.190.00 இலட்சங்களுக்கு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி பணிக்கான நிதி ஒதுக்கீடு முதலீட்டு மான்ய நிதி திட்டம் 2020–2021 (CGF 2020-2021)ல் அல்லது அரசின் வேறு ஏதாவது திட்டத்திலோ முழு மான்யமாக நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களிடம் நிதி ஒதுக்கீடு மற்றும் நிர்வாக அனுமதி பெறுவதற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது

அலுவலககுறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. முதலீட்டு மான்ய நிதி திட்டம் 2020–2021 ஆண்டின் கீழ் மேற்காணும் பணிகளை மேற்கொள்ளவும், கூடுதலாகும் செலவினத் தொகையை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 300/2020/இ2 )

பொருள் 3

இடைப்பாடி நகாரட்சியில் புதிய அலுவலக வளாகம் முதலீட்டு மான்ய நிதி திட்டம் 2017–2018ம் (CGF 2017-2018)ஆண்டு திட்டத்தில் மதிப்பீடு ரூ.5.00 கோடியில் கட்டப்பட்டு ஜுலை 2020–ல் திறக்கப்பட தயார் நிலையில் உள்ளது. புதிய அலுவலக வளாகத்தில் தளவாடங்கள் மற்றும் உள்ள கட்டமைப்பு (Furnitures and Interior works) பணிகள் செய்வதற்க்கு மதிப்பீடு ரூ.135.00 இலட்சங்கள் தயார் செய்யப்பட்டு உள்ளது. மேற்படி பணிக்கான மதிப்பீட்டு தொகை ரூ.135.00 இலட்சங்களை முதலீட்டு மான்யம் நிதி திட்டம் 2020–2021ல் (CGF 2020-2021) அல்லது வேறு ஏதாவது ஒரு அரசு நிதி திட்டத்தில முழு மான்யமாக நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களிடம் நிதி ஒதுக்கீடு மற்றும் நிர்வாக அனுமதி பெறுவதற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலககுறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. முதலீட்டு மான்ய நிதி திட்டம் 2020–2021 அல்லது அரசின் வேறு ஏதாவது ஒரு திட்டத்தின் கீழ் ஒதுக்கீடு செய்யப்படும் நிதிக்கு கூடுதலாக ஏற்படும் செலவினத் தொகையை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 290/2020/இ2 )

பொருள் 4

இந்நகராட்சிக்குட்பட்ட வீட்டு வசதி வாரியம் நீரேற்று நிலையம் மற்றும் பூலாம்பட்டி சாலை தரைமட்ட நீர்தேக்கத்தொட்டி ஆகியவற்றில் அமைக்கப்பட்டுள்ள தானியங்கி குளோரின் அமைப்புகள் செயல்பட தேவைப்படும் திரவ குளோரின் 2020 –2021 ம் ஆண்டிற்கு கொள்முதல் செய்யும் பணியினை மேற்கொள்ளவும் மற்றும் அதற்கான உத்தேச செலவினம் ரூ9.90 இலட்சத்திற்கு மன்ற முன் அனுமதி பெற்று செய்திட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலககுறிப்பு

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) முன் அனுமதி பெற்று மேற்கண்ட பணிகளுக்கு விலைப்புள்ளி கோரவும் மேற்கண்ட பணிகள் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண் 0781/2020/இ1)

தனிஅலுவலர் மற்றும் ஆணையாளர்
இடைப்பாடி நகராட்சி